**செய்தி வெளியீடு எண்:57** **நாள்:27.01.2021**

**<u>இன்று (27.1.2021), மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நினைவிடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:</u>**

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தைத் திறந்து வைத்து, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நினைவிடத்தை புதுப்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய

மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு இருக்கின்ற

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் மாநில உறுப்பினர் அண்ணன் திரு.கே.பி.முனுசாமி அவர்களே!

முன்னாள் அமைச்சர் மாநில உறுப்பினர் அண்ணன் திரு. வைத்திலிங்கம் அவர்களே!

முன்னாள் அமைச்சர் கழகத்தின் அவைத் தலைவர் அண்ணன் திரு.மதுசூதனன் அவர்களே!

தலைமைக் கழகத்தின் மூத்த நிர்வாகிகளே!

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே!

காவல்துறை உயர் அதிகாரிகளே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே

வாரியத் தலைவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வருகை தந்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே!

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீதும் மாறாத பற்றும் பேரன்பும் கொண்ட இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன்பிறப்புகளே!

இளைஞர் பட்டாளங்களே!

மகளிர் அணியைச் சேர்ந்த சகோதரிகளே!

பத்திரிகையாளர்களே மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1948ஆம் ஆண்டு, பிப்ரவரி 24ம் தேதி இந்த மண்ணிலே பிறந்து இயக்கத்தையும் தமிழ்நாட்டின் மக்களையும் காப்பதற்காக இறைவன் கொடுத்த கொடை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்கள் சர்ச் பார்க் கான்வெண்ட்டில் பள்ளிப்படிப்பை சிறப்புடன்

முடித்தார். சிறு வயதிலிருந்தே கலையில் ஆர்வமும் திறமையும் ஒருங்கே பெற்றிருந்தார். பரதநாட்டியத்தை முறையாகக் கற்றுக் கொண்டவர். பல்வேறு மொழிகளிளே பேசக்கூடிய ஆற்றல் மிக்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்த்திரை உலகில் “வெண்ணிற ஆடை’’ படம் மூலம் அறிமுகமானார். திரைக் காவியங்களில், தான் ஏற்ற பாத்திரங்களில் சிறப்பான நடிப்பினை வெளிப்படுத்தி மக்களிடத்தில் தனக்கென இடம் பெற்றவர். பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடன் பல படங்களில் நடித்து புகழ் பெற்றவர். திரைத்துறைக்கு தான் அளித்த சிறப்பான பங்களிப்பினால் கலைமாமணி, பிலிம்ஃபேர் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர் நம்முடைய அம்மா அவர்கள். கழகத்தில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டார்.

பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தியபோது, அத்திட்டத்தின் உயர்மட்டக் குழுவில் மாண்புமிகு அம்மா அவர்களை உறுப்பினராக நியமித்து அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அடிக்கல் அமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக தேர்ந்தெடுத்த பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து கழகத்திற்கு வளர்ச்சியை தேடித் தந்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 1984ல் மக்களவை உறுப்பினராக பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் நியமனம் செய்தார்கள். மக்களவையில், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வாதத் திறமையைக் கண்டு அப்போதைய மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களை வெகுவாகப்

பாராட்டினார்கள். 1989 சட்டமன்ற தேர்தலில் முதன்முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையைப் பெற்றவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவிற்குப்பின் நமது இயக்கத்தினை 1989ல் ஒருங்கிணைத்து, கழகத்தின் பொதுச்செயலாளராக பதவி ஏற்று கழகத்தை வழிநடத்தியவர். தமிழ்நாட்டின் முதலமைச்சராக 15 1/2 ஆண்டு காலம் ஆட்சி புரிந்து, வரலாற்றில் 36 ஆண்டுகளுக்குப்பின் இரண்டாவது முறையாக தொடர்ந்து ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ராணுவ கட்டுக்கோப்போடு கட்சியையும், ஆட்சியையும் வழிநடத்தி, பெண்குலத்திற்கே பெருமை சேர்த்தவர், இரும்பு மங்கை என்று பெயர் பெற்றவர், எதிரிகளாலும் தைரியசாலி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி அகில இந்திய அளவில் நாடாளுமன்றத்தில் மூன்றாவது மிகப் பெரிய கட்சியாக உருவெடுக்கும் அளவுக்கு வென்று காட்டி பெருமைப்படுத்தியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த வரலாற்றுச் சாதனையை இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த எந்தவொரு தலைவரும் நிகழ்த்தியதில்லை என்று பெருமைப்படும் அளவுக்கு வியப்பில் ஆழ்த்தியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பெற்ற தாய் தன் பிள்ளைகளைக் கவனிப்பது போல், தமிழ்நாட்டு மக்களைக் கவனித்து, ஏழை எளிய மக்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு முன்மாதிரி திட்டங்களைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தியாவிலேயே மிக அதிக நாட்கள் பதவியில் இருந்த பெண் முதலமைச்சர் என்ற

சாதனையைப் படைத்து பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்கு வழங்கிய ‘‘அமைதி–வளம்–வளர்ச்சி’’ என்னும் தாரக மந்திரத்தில் செயல்பட்டு, அமைதிப் பூங்காவாக, நல்ல வளத்துடன், வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு வெற்றிநடைபோட்டு வருவது அனைவரும் அறிந்ததே. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ உருவாக்கி தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவெடுக்க அடிகோலியவர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ‘‘மக்களால் நான்; மக்களுக்காக நான்’’ என்று அல்லும்பகலும் மக்களுக்காகவே சிந்தித்து செயலாற்றி வெற்றி கண்டவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 69 சதவிகித இடஒதுக்கீட்டினை செயல்படுத்தி சமூகநீதியை நிலை நாட்டி, ‘‘சமூக நீதி காத்த வீராங்கனை’’ மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழ்நாட்டிற்கான காவேரி நீர் பங்கீடு குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பினை, நீதிமன்றம் மூலமாக அரசிதழில் வெளியிட தொடர்ந்து போராடி வெற்றி கண்டு, காவேரி டெல்டா மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்திய ‘‘பொன்னியின் செல்வி’’ மாண்புமிகு அம்மா அவர்கள். அதுமட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த சட்டப்போராட்டம் நடத்தி பெற்றி கண்டவரும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சென்னை நகரின் குடிநீர் பிரச்சனைக்காக புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றியவர் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் உலகளவில் பாராட்டைப் பெற்றன. அதை பலர் தங்கள் நாட்டிலும் நடைமுறைப்படுத்தினர். பெண் சிசுக்களைக் காக்க தொட்டில் குழந்தைகள் திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் போன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அம்மா உணவகம், ஏழை மக்களின் வாழ்வில் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி, அரிசி, மடிக்கணினி, மிதிவண்டி, கல்வி உபகரணங்கள், சீருடை, தாய்–சேய் பெட்டகம் என பல திட்டங்களைக் கொண்டு வந்து மக்களின் வாழ்வில் ஏற்றம் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சாதாரண மக்களும் வசதி படைத்த மக்களுக்கு இணையாக தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கு விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொண்டு வந்தவர். மழை நீர் சேகரிப்பு என்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் நீர்வளம் பெருக அடித்தளமிட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சுனாமி, மழை வெள்ளமென்று இயற்கைப் பேரிடர்களின்போது அரசு இயந்திரம் முழு ஆற்றலுடன் இயங்க முன்மாதிரியாக இருந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், பெண்கள் நலனைப் பாதுகாப்பதிலும் அம்மா அவர்கள் காட்டிய நெஞ்சுரமும், திறனும் கொண்டிருந்ததால் கனிந்த இதயம் கொண்ட இரும்புப் பெண்மணி என்று புகழ் பெற்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நில அபகரிப்பு தடுப்புச் சட்டம் மூலமாக பல்வேறு குடும்பங்களின் உடைமைகளை மீட்டுக் கொடுத்த காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில் திட்டங்களை அமல்படுத்தியவர். மாற்றுத்திறனாளிகளுக்கு

மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்கியவர். திருக்கோயில்களில் நாள் முழுதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 விழுக்காடு இடங்களென்று அறிவித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை அறிவித்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். காவல் துறையில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்ததோடு முற்றிலும் பெண்களே பணியாற்றக்கூடிய நியாய விலைக் கடைகள், நூலகம் போன்று அறிமுகம் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அம்மா சிறு வணிகக் கடன் போன்ற எண்ணற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி, ஏழை மக்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் ஊக்கம் அளித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஆதரவற்ற பெண்களுக்கு திருமணத்திற்கு உதவித் தொகையும் தாலிக்குத் தங்கமும் கொடுத்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு அரசு சேவை இல்லங்கள் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்கள் தீட்டி செயல்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும், அம்மா வழியிலேயே பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாக தொடர்ந்து நின்று அவர்களை காத்து வருகின்றது. ஒரு தலைவனுக்கு உரிய ஆளுமைகளாக என்னென்ன கூறப்படுமோ அவை அத்தனையும் மாண்புமிகு அம்மா அவர்களின் இயல்பான குணங்களாக இருந்துள்ளது என்பது இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்னுதாரணம் ஆகும்.

தமிழ்நாட்டில் கட்சி, அரசியல் ஆர்வம் இல்லாத பல பெண்களிடம் சென்று உங்கள் ரோல் மாடல் யார் என்று கேட்டால் சற்றும் தாமதமில்லாமல் அவர்கள் மாண்புமிகு அம்மாவின் பெயரைத்தான் சொல்கிறார்கள் என்பதும், மாண்புமிகு அம்மாவைப் போல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பல பெண்கள் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கின்ற காட்சியை நாம் காண்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலம் தமிழ்நாட்டின் பொற்காலம் என அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் வகையில், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உட்கட்டமைப்பு, தொழில் துறை, விவசாயம், நீர் மேலாண்மை, மீனவர் மேம்பாடு, எரிசக்தி மேம்பாடு, இளைஞர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், ஆதிதிராவிடர் நலன், விளையாட்டு வீரர்கள் நலன் என அனைத்து துறைகளிலும் எண்ணற்ற நலத்திட்டங்களைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் சாதிக்க முடியாத பல அரிய சாதனைகளைப் புரிந்து, பல்வேறு வெற்றிகளையும், விருதுகளையும் பெருமைமிகு மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிய பெருமை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவைச் சாரும். தமிழ்நாடு மக்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சல் முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமில்லா வாழ்விற்கு பொருத்தமாக மெரினா கடற்கரையில் இந்த மிகப் பெரிய நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பிரம்மாண்டமான நினைவு மண்டபம் அமைக்க உலகளாவிய கட்டடக் கலை நிபுணர்களிடமிருந்து வரைபடங்களைப் பெற்று, எல்லோரும் பாராட்டும் வகையில் நிபுணர் குழு மூலம் வரைபடங்களைத் தேர்வு செய்து குறித்த காலத்திற்குள் இந்த நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. நினைவு மண்டபத்தில், ஃபீனிக்ஸ் பறவை வடிவிலான நினைவுச் சின்னத்துடன் அருங்காட்சியும், அறிவுத் திறன் பூங்கா, கரிங்கல்லால் ஆன நடைபாதை வசதி, புல்வெளி மற்றும் நீர்த்தடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டு எழில்மிகு தோற்றத்துடன் இன்று காட்சியளிக்கின்றது. இத்தனை சிறப்பும், இன்னும் எண்ணற்ற சிறப்பும் கொண்ட இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை நேரில் கண்டு அவர்களிமிருந்து அரசியலையும், ஆட்சிக் கலைகளையும் கற்றுக் கொள்ள நமக்கெல்லாம் கிடைத்த வாய்ப்பு மகத்தானது. அந்த வாய்ப்பு இறைவன் நமக்கு அளித்த கொடை என்றே எண்ணலாம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருமை, பெருமைகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக விளங்கிடவும், இங்கே அழகான நினைவிடத்தை புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு அமைத்திருக்கின்றோம். இந்த நினைவிடத்தை கனத்த இதயத்துடன் பொதுமக்களுக்கு அப்பணித்திருக்கின்றேன். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவிடமும் புதுப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவராலும் அன்போடு

அம்மா என்று அழைக்கப்படுபவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அந்த அளவிற்கு ஆழமான அன்பை அனைத்துத்தரப்பு மக்களிடமும் பெற்றவர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஒருவர்தான்.

மாண்புமிகு அம்மா அவர்களை நல்லடக்கம் செய்த இந்த இடத்தில் நினைவிடம் கட்டக்கூடாது என்று பினாமிகளை வைத்து நீதிமன்றத்தில் வழக்கு போட்டவர் திமுக தலைவர் திரு.ஸ்டாலின். அவருடைய தந்தை திரு.கருணாநிதி இறந்தபோது, இதே பகுதியில் அடக்கம் செய்யப்படுகின்ற நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களை நல்லடக்கம் செய்த இடத்தில் நினைவகம் கட்டுவதை எதிர்த்து போடப்பட்ட வழக்குகளை இரவோடு இரவாக நீதிமன்றத்திலிருந்து வாபஸ் பெற்றவர் இதே திமுக தலைவர் திரு.ஸ்டாலின் தான். இதிலிருந்து, எந்த அளவுக்கு அம்மா அவர்களுக்கு நினைவிடம் கட்டுவதை தடை செய்ய வேண்டும் என்ற தீய எண்ணம் கொண்டவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஸ்டாலின் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இவர்களது பினாமிகள் வழக்குகளை வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து திரு.ஸ்டாலின் அவர்களின் கபட நாடகத்தை உலகமே அறிந்துள்ளது, இவரது சாயம் வெளுத்துள்ளது. இத்தகைய தீய எண்ணம் கொண்டவர் திரு.ஸ்டாலின் அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில், நூறாண்டுகள் ஆனாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும் ஆட்சியும் தொடரும் என்றும், எவராலும் அழிக்க முடியாது எஃகு கோட்டையாகத் திகழும் என்றும் சூளுரைத்தார். அவருடைய சூளுரையை ஏற்று, வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில்

பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சி அமைப்போம், அதுதான் நம்முடைய லட்சியம், அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற நன்றிக்கடன் என்பதை ஒவ்வொரு தொண்டனும் உணர வேண்டும், இரவு, பகல் பாராமல் பாடுபட வேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி, மீண்டும் அம்மா அவர்கள் சொல்லிய இலட்சிய வார்த்தைகளுக்கிணங்க, அம்மாவுடைய ஆட்சியை அமைத்து, அம்மாவுடைய இதே நினைவு மண்டபத்தில் நாம் அனைவரும் நன்றி செலுத்துவதற்கு வீர சபதம் ஏற்போம்.

மாண்புமிகு அம்மாவின் நினைவிடத்தை உலகமே வியக்கும் வண்ணம் சிறப்பான முறையில் வரலாற்றில் இடம்பெறும் வகையில் அமைப்பதற்கு தங்கள் உழைப்பை அளித்த பொதுப்பணித் துறை மற்றும் செய்தித் துறை அலுவலர்கள், பணியாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் இதற்காக உழைத்த அனைவரையும் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய நினைவிட நிகழ்ச்சியில் பங்குபெறுவதற்கு வந்து, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று வாகனங்களில் வீடு திரும்புகின்ற அத்தனை கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் பத்திரமாக வீடு திரும்ப வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மிகப் பிரம்மாண்டமான எழில்மிகு நினைவிடத்தை உருவாக்குவதற்கு காரணமாக விளங்கிய பொதுப்பணித் துறையின் முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய டாக்டர் க. மணிவாசகம் அவர்களுக்கும் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றிய

அனைத்து பொறியாளர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இந்த நிகழ்ச்சியை சீரும், சிறப்போடும் இந்த நினைவிட திறப்பு விழாவை நடத்துவதற்கு ஏதுவாக அமைந்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரியாதைக்குரிய திரு.மகேசன் காசிராஜன் அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய அலுவலர்களுக்கும், வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**